**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - 2025-26-ஆம் கல்வியாண்டில் 13 புதிய அரசு தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல் மற்றும் 4 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல், அப்பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (அகஇ2)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.243** **நாள்: 27.10.2025**
**திருவள்ளுவர் ஆண்டு 2056**
**விசுவாவசு வருடம், ஐப்பசி - 10**

**படிக்கப்பட்டவை:-**

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.9111/ கே2/ 2025, நாள் 05.05.2025 மற்றும் 17.10.2025.

******

ஆணை :-

2025-26-ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வியை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிக்கு அருகிலும், நடைமுறையில் உள்ள விதிகளின்படி தொலைதூர கிராமப்பகுதிகள், மலைப்பகுதிகள் மற்றும் புதிய குடியேற்றப் பகுதிகளில் புதிதாக 13 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும். மேலும், 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் 13 தொடக்கப் பள்ளிகள் தொடங்கவும், 4 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தவும், இப்பள்ளிகளுக்கான தலைமை ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்கவும், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்

பணியிடங்களாக தரம் உயர்த்தவும், இதற்கான கூடுதல் செலவினம் ஓராண்டிற்கு ரூ.37,200/-ஐ அனுமதித்து ஆணை வழங்குமாறும், மேலும் புதியதாக தொடங்கப்படும் 13 தொடக்கப் பள்ளிகளுக்கு புதிய வகுப்பறை கட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ.6,98,54,000/- மற்றும் தரம் உயர்த்தப்படும் 4 நடுநிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கு ரூ.3,88,80,000/- ஆக மொத்தம் ரூ.10,87,34,400/- (ரூபாய் பத்து கோடியே எண்பத்தேழு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நானூறு மட்டும்) ஒதுக்கீடு செய்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மூலம் மேற்கொள்ளவும், அவ்வியக்ககம் வாயிலாகவே கட்டுமான பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுமதி அளிக்குமாறும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, மாணவர்களின் நலன் கருதி நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் 13 புதிய அரசு தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல் மற்றும் 4 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல் மற்றும் அப்பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்தல் குறித்து பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

i. 2025-2026-ஆம் கல்வியாண்டில் இவ்வரசாணையின் இணைப்பு-I மற்றும் இணைப்பு-II-இல் உள்ளவாறு, 13 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படுகிறது மற்றும் 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படுகிறது.

ii. புதியதாக தொடங்கப்படும் 13 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றிற்கு ஒரு தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் (நிலை – 15, ரூ.36,200-1,33,100) மற்றும் ஒரு இடைநிலை ஆசிரியர் (நிலை - 10, ரூ.20,600 - 75,900) பணியிடம் வீதம் 13 புதிய தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் 13 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை, 1 தலைமை ஆசிரியர் பணியிடத்திற்கு 2 இடைநிலை ஆசிரியர் என்ற வீதத்திலும், 1 இடைநிலை ஆசிரியர் பணியிடத்திற்கு 1 இடைநிலை ஆசிரியர் என்ற வீதத்திலும் ஆக மொத்தம் 39 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை இயக்குநரின் பொது தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்ட காலி இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் இருந்து வழங்கி நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

iii. நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் 4 பள்ளிகளுக்குத் தேவையான 12 பட்டதாரி ஆசிரியர் (நிலை – 16, ரூ.36,400 -

ஆசிரியர்

ரூ.1,34,200) பணியிடங்களை, ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் என்ற அடிப்படையில் இயக்குநரின் பொது தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்ட 24 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களிலிருந்து வழங்கி நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

iv. 4 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்படுகிறது. அவ்வாறு நிலை உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடர் கூடுதல் செலவினம் ஆண்டொன்றிற்கு ரூ.37,200/- (ரூபாய் முப்பத்தேழாயிரத்து இருநூறு மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

v. 2025-2026-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்படும் இணைப்பு-I, வரிசை எண்.1 முதல் 12 வரை உள்ள 12 தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும் இணைப்பு-II, வரிசை எண்.1 மற்றும் 2-இல் உள்ள இரண்டு பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய வகுப்பறைகள் ரூ.827.88 இலட்சம் செலவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்ட கணக்கு 2022-23-இல் (SIDS) செலவிடப்படாத இருப்பில் உள்ள நிதி சேமிப்பு மற்றும் வட்டித் தொகையிலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மூலம் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

vi. இணைப்பு-I, வரிசை எண்.13-இல் உள்ள புதிதாக தொடங்கப்படவுள்ள ஒரு தொடக்கப் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளியிலிருந்து நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும் இணைப்பு-II வரிசை எண்.3 மற்றும் 4-ல் உள்ள 2 பள்ளிகளுக்கு, புதிய வகுப்பறை கட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ.2,59,46,400/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி-3 (ii), (iii) மற்றும் (iv)-இல் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான கூடுதல் செலவினம் 2025-26-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 பொதுக்கல்வி 01 தொடக்கக்கல்வி 101 அரசு தொடக்கப்பள்ளிகள் மாநில செலவினங்கள் AC ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் 301 00 சம்பளங்கள்.

(IFHRMS Code: 2202 01 101 AC 301 00)

5. மேலே பத்தி-3 (vi)-இல் குறிப்பிடப்பட்ட பள்ளிகளின் புதிய வகுப்பறை கட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கான கருத்துருவினை எதிர்வரும் 2026-27-ஆம் ஆண்டுக்கான நபார்டு வங்கி கடனுதவி திட்டத்தின்கீழ் மேற்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி-3 (ii), (iii) மற்றும் (iv) வரை ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணை நிதித் துறையின் கோ. எண்.3978/நிதி (கல்வி-II)/ 2025, நாள் 27.10.2025 மற்றும் பணியிட பேரேட்டு எண். (PSL No). 202510PSL0184, நாள் 27.10.2025-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன் பி.,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை - 6.
மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை - 6.
மாநிலக் கணக்காயர், சென்னை - 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல்மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
நிதி (கல்வி-II/ வரவு செலவுI/ II/ வ.வ.I/ மை.ம.ஆ.பி) துறை, சென்னை - 9.
பள்ளிக் கல்வி (வரவு-செலவு) துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

இணைப்பு - I

அரசாணை (நிலை) எண்.243, பள்ளிக் கல்வி (அகஇ2) துறை,

நாள் 27.10.2025

**2025-26-ஆம் ஆண்டில் புதியதாக துவங்கப்படும்**

**தொடக்கப் பள்ளிகளின் விவரம்**

| வ. எண். | மாவட்டம் | புதியதாக துவங்கப்படும் ஊராட்சி ஒன்றிய / மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளின் அமைவிடம் |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம் | பாலியப்பட்டு ஊராட்சி, செங்கம் ஒன்றியம், திருவண்ணாமலை கல்வி மாவட்டம். |
| 2. | வேலூர் மாவட்டம் | குப்தூர் குடியிருப்பு பகுதி, அணைக்கட்டு ஒன்றியம். (பீஞ்சமந்தைக்கு தெற்கு) |
| 3. | வேலூர் மாவட்டம் | சின்ன எட்டுப்பட்டி குடியிருப்பு பகுதி, அணைக்கட்டு ஒன்றியம். (பீஞ்சமந்தைக்கு வடக்கு) |
| 4. | கிருஷ்ணகிரி மாவட்டம் | கடூர் குடியிருப்பு பகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ஓசூர் கல்வி மாவட்டம். |
| 5. | கிருஷ்ணகிரி மாவட்டம் | கட்டூர் குடியிருப்பு பகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ஓசூர் கல்வி மாவட்டம். |
| 6. | திருப்பத்தூர் மாவட்டம் | உடையராஜபாளையம் குடியிருப்பு பகுதி, மாதனூர் ஒன்றியம். |
| 7. | மதுரை மாவட்டம் | செட்டிக்குளம் ஊராட்சி, திருமங்கலம் ஒன்றியம், திருமங்கலம் கல்வி மாவட்டம். (பெருமாள்பட்டி மற்றும் செட்டிகுளம்) |

| | | |
|---|---|---|
| 8. | விருதுநகர் மாவட்டம் | இளந்திரை கொண்டான் ஊராட்சி,<br>ராஜபாளையம் ஒன்றியம்,<br>சிவகாசி கல்வி மாவட்டம். |
| 9. | விருதுநகர் மாவட்டம் | எம்.சொக்கலிங்கபுரம் ஊராட்சி,<br>சிவகாசி ஒன்றியம்,<br>சிவகாசி கல்வி மாவட்டம். |
| 10. | நாகப்பட்டினம் மாவட்டம் | தேத்தாகுடி தெற்கு ஊராட்சி,<br>வேதாரண்யம் ஒன்றியம். |
| 11. | நாமக்கல் மாவட்டம் | அவுரிக்காடு ஊராட்சி,<br>கொல்லிமலை ஒன்றியம். |
| 12. | காஞ்சிபுரம் மாவட்டம் | காவூர் கிராமம்,<br>காவித் தண்டலம் ஊராட்சி,<br>உத்திரமேரூர் ஒன்றியம். |
| | திருவள்ளூர் மாவட்டம் | வார்டு 31, ஆவடி மாநகராட்சி,<br>தந்தை பெரியார் நகர்.<br>திருமுல்லைவாயல்,<br>வில்லிவாக்கம் ஒன்றியம். சென்[illegible] |

**சந்தர மோகன். B,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**//உண்மை நகல்//**

[illegible]
**பிரிவு அலுவலர்.**
[illegible]
27.10.25

**இணைப்பு-II**

அரசாணை (நிலை) எண்.243, பள்ளிக் கல்வி (அகஇ2) துறை,

நாள் 27.10.2025

**2025-26-ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் தொடக்கப் பள்ளிகளின் விவரம்**

| வ. எண். | மாவட்டம் | நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும் தொடக்கப் பள்ளியின் பெயர் | பள்ளியின் U-DISE எண். |
|---|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, குண்டுராணி, அணைக்கட்டு ஒன்றியம். | 33041202604 |
| 2. | விழுப்புரம் மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கன்னிகாபுரம், மரக்காணம் ஒன்றியம், திண்டிவனம் கல்வி மாவட்டம். | 33070600802 |
| 3. | வேலூர் மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, சின்ன அல்லாபுரம், வேலூர் புறநகர் ஒன்றியம். | 3304090211 |
| 4. | நாகப்பட்டினம் மாவட்டம் | நகராட்சி தொடக்கப்பள்ளி, டாடா நகர், 35வது வார்டு, நாகப்பட்டினம் ஒன்றியம். | 33190103152 |

**சந்தர மோகன். B,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்.**

27.10.25